நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



திருமக ளுக்கு மருமகள் ஆகிச்
செவியில் செல்வம் தருபவள் நீயே!
இருமை நலஞ்சேர் யாழிசைப் பாயே!
எங்கள் நெஞ்சில் எழுந்தருள் வாயே!

பிப்ரவரி 1989

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 1

விபவ
தை

பிப்ரவரி
1989

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்காய்! எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே!

—குமரகுருபரசுவாமிகள்

ஆசிரியர் :
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர் :
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00



கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை



தஞ்சாவூர் நகர விடுதித் திறப்பு விழா

தஞ்சாவூர் கீழவாசல் பாம் பாட்டித் தெருவில்புதிதாகஅமைக் கப் பெற்றிருக்கும் நகர விடுதிக் கட்டிடத்தின் திறப்பு விழா 11-12-88 ஞாயிறன்று சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தலைவர் பிஎல். ஏ. சிதம்பரம் அவர்கள் தலைமையில் 'மீனாட்சி திருமைந் தன்' வி. என். சிதம்பரம் செட்டி யார் அவர்கள் மேற்படி நகர விடுதியைத் திறந்து வைக்க தொழிலதிபர் நா. அ. சுப்பிர மணியன் செட்டியார் அவர்கள் குத்துவிளக்கேற்றி புதுக் கணக்கு எழுதிச் சிறப்பித்தார்கள் செய லாளர் திரு. ஆர்எம். ஜோதிலிங் கம் வரவேற்று அறிக்கை வாசித் தார். வானமாமலைக்கோட்டை தவத் திரு காத்தையா சுவாமிகள் ஆசி யுரை வழங்கினார்கள் பொற் கிழிக் கவிஞர் பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் சிறப் புரையாற்றினார்.

திரு. ஆர்எம். ஏகப்பன், நக ரத்தார் சங்க முன்னாள் தலைவர் கள் திரு. ஏ. அழகப்பன் திரு. என். லெட்சுமணன், நகரவிடுதி சீர்திருத்தக் குழுத் தலைவர் திரு கேஆர். அண்ணாமலை திரு. ஜெமினி ஒய். பழநியப்பன் துணைத் தலைவர் திரு. அண. சோமசுந்தரம் திரு. பிஎல். இராம நாதன் திரு. பிஆர். அருணாசலம் திரு. எல். இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இணைச் செயலாளர் திரு. இராம. கண்ணன் நன்றி கூறினார்.

விழாவில் கலந்து கொண்ட வர்களுக்கு மதிய உணவு அளிக் கப் பெற்றது. அச் செலவினை திருவாளர்கள் நா. அ. சுப்பிர மணியன் செட்டியார் பிஆர் ஏ. காசி, கே ஆர். அண்ணாமலை. ஏ. அழகப்பன் ஆகியோர் ஏற் றுக் கொண்டார்கள்.

(தஞ்சாவூர் நகர விடுதி. 387/P பாம்பாட்டித் தெரு, கீழ வாசல் என்ற முகவரியில் இயங்கி வருகிறது. மகமை நபர் ஒரு வருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2/- வீதம் வசூலிக்கப் பெறுகிறது.)

அத்துவிதம் பற்றி பண்டிதமணி

''ஒரு வண்டு தேனிறைந்த மலரில் வீழ்ந்து, அம் மதுவைத் தெக்கற உண்டு களித்து அதில் தோய்ந்திருக்கும்போது. தான் வேறு மது வேறு என்னும் வேற் றுமை உணர்வின்றிக் கிடத்தல் போல, ஆன்மா பேரின்ப நுகர்ச்சி யில் தலைப்பட்டுத் தான் ஒரு பொருள் என்னும் வேற்றுமை உணர்வின்றி ஒன்றுபட்டிருக்கும் அந்நிலையே அத்துவித நிலையா கும்'' என்று பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர் கள் கூறியிருக்கிறார்கள்

இராங்கியம் சுப்பிரமணியர் கோயிலில் குடநீராட்டு!

இராங்கியத்தில் புதிதாக அமைக்கப் பெற்றுள்ள அருள்மிகு வள்ளி தேவயானை உடனுறை சுப்பிரமணியர் நூதன ஆலயத்தின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 10-2-89 (தை மீ 28வ) வெள்ளிக்கிழமை காலை மணி 9-05க்கு மேல் 9-45க்குள் நடைபெற உள்ளது. 8-2-89 காலை 9 மணிக்கு மேல் யாகசாலைப் பூஜைகள் தொடங்குகின்றன. 10-2-89 மாலை 4-30 மணி முதல் 6 மணிக்குள் மகா அபிஷேகம். இரவு 9 மணிக்கு சுவாமி திரு உலா.

தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் குடநீராட்டு விழா

தேவகோட்டை நகரச் சிவாலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 10-2-89 (தைமீ 28வ) வெள்ளிக்கிழமை காலை 8-45க்கு மேல் 9-30 மணிக்குள் நடைபெற உள்ளது. 1-2-89 காலை மணி 9-30 க்கு மேல் 10-30 க்குள் அனுக்ஞை பூஜை தொடங்குகிறது 2-2-89 காலை தனபூஜை. 3-2-89 காலை கணபதி ஹோமம் 4-2-89 காலை நவக்கிரக ஹோமம். 5-2-89 காலை வாஸ்து சாந்தி. 6-2-89 காலை மிருத்சங்கரனம். ரட்சாபந்தனம். மாலை 5-00 மணிக்கு மேல் 6-00க்குள் கடஸ்தாபனம் யாக பூஜை தொடக்கம். யாக பூஜை 10-2-89 காலை வரை எட்டுக காலம் நடைபெற உள்ளது 10-2-89 மாலை 3 மணி அளவில் மகா அபிஷேகம். 6 மணி அளவில் திருக்கல்யாணம். இரவு 9 மணி அளவில பஞ்சமூர்த்தி திரு உலா. 6-2-89 முதல் வடமொழி, தமிழ் வேத பாராயணங்களும் சமயச் சொற்பொழிவுகளும் விசேட மேளக்கச்சேரிகளும் நடைபெற உள்ளன.

பிள்ளையார்பட்டியில் ஒன்பது கூட்டுத் திருமணங்கள்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியில் பிள்ளையார்பட்டியில் 10-2-89 (தை மீ 28 வ) வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு மேல் 10-30 மணிக்குள் ஒன்பது கூட்டுத் திருமணங்கள் நிகழ உள்ளன. திருச்சி நகரத்தார் சங்கம் பல திருமணங்களை ஒரேநாளில் நடத்தியுள்ளது என்றாலும் இதுபோல் ஒன்பது திருமணங்களை ஒரேநாளில் நடத்தியது இல்லை. இது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

வெள்ளி விழா ஆண்டு மலர் வெளியீட்டு விழா

பள்ளத்தூர் சௌந்தரராஜப் பெருமாள் கோயிலில் 6-1-89 அன்று பழநிப் பாதயாத்திரை வெள்ளிவிழா ஆண்டு மலர் வெளியீட்டு விழா கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிகர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நூல் வெளியீட்டாளர் திரு. அரு. பழநியப்பன் அனைவரையும் வரவேற்றார். புலவர்மாமணி திரு. மா. முத்துராமன் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். முதல் பிரதியை நேமத்தான்பட்டி 'அஜந்தா' திரு. நா. அரு. சித. அருணாசலம் பெற்றுக்கொண்டார். தவத்திரு சொபானந்த சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினார்.

திருமணம்

வேந்தன்பட்டி ராம. மு ராம. பிச்சப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி ராமாயி என்கிற சண்முகவல்லிக்கும் மேலைச்சிவபுரி ஆ. கரு. கணபதி செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அழகப்பன் என்கிற காசிராஜன் B.Sc க்கும் 20-11-88 அன்று வேந்தன்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

நம் இனப் பெருமை!

ஃ ஈசனுக்கு அம்மையையும் அப்பனையும் தந்த இனம், நகரத்தார் இனம்! நம் குலத்துதித்த காரைக்காலம்மையை சிவபெருமான் ''அம்மையே'' என்றழைத்தார். நம் பட்டினத்தாருக்குச் சிவபெருமானே குழந்தையாக வந்து மருதவாணன் என்ற பெயரில் வளர்ந்து அவரை ''அப்பா'' என்றழைத்தார்.

ஃ மன்னர்களுக்குத் தலைநகரில் கோட்டை இருந்தது போல் அவ்வரசர்கள் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் கோட்டைகள் போல் வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்ததால் நம்மினத்தவர் 'நாட்டுக் கோட்டையார்' என்றழைககப் பட்டார்கள்.

ஃ காஞ்சி நகரத்திலிருந்தும் புகார் நகரத்திலிருந்தும் வந்தவரென்பதால் 'நகரத்தார்' என அழைக்கப் பெறுகிறோம்.

ஃ ஐயாயிரமாண்டுச் சரித்திரப் பெருமையோடு இதுவரை யாரும் மதம் மாறாத இனம், நம்மினம்.

ஃ பர்மாவின் முன்னேற்றத்திற்கு நகரத்தார்களே காரணம்.

ஃ முன்பு ஏழைகளே இல்லாத ஒரே இந்திய சமூகம்.

ஃ மலேயா சுல்தான், தஞ்சை சரபோஜி, புதுக்கோட்டை மன்னர் ஆகியவர்களுக்குப் பண உதவி செய்த சமூகம், நகரத்தார் சமூகம்.

ஃ மன்னர்களுக்கு அடுத்தபடியாக அதிகத் திருப்பணிகள் செய்தவர்கள் நகரத்தார்கள்.

ஃ கோவில் திருப்பணிகளில் ஈடுபடாத நகரத்தார் குடும்பம் மிகச் சொற்பமே.

ஃ இந்தியாவில் வங்கித் தொழிலின் 'முன்னோடிகள் நம்மவர்கள் 'ஃபாரின் எக்சேஞ்' முறையை அறிமுகப்படுத்தியவர்கள்.

ஃ இந்தியாவிலேயே கல்விக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம், நம் நகரத்தார் சமூகம்.

ஃ மூவேந்தர்களோடு ஒப்பிடும் அளவு தமிழிசைக்குத் தொண்டு செய்தவர்கள்.

ஃ நாயன்மார்கள் 63 பேரில் ஐவர் நகரத்தார் (அவர்கள்: இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார், மூர்த்தி நாயனார், கலிக்கம்ப நாயனார், காரைக்கால் அம்மையார்)

ஃ ஐம்பெரும் காப்பியத்தில் மூன்று நகரத்தார் பற்றியது (அவை: சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி.)

தொகுப்பு: தஞ்சை
பழ. வள்ளியப்பன்.

குருவாயூரப்பனின் சிறப்புகள்

வலையபட்டி S. கணபதி, திருவனந்தபுரம்

கேரள மாநிலம். குருவாயூர். அதிகாலை மணி மூன்று, நாதஸ்வரம், மேளம் முழங்க, சங்கொலியும், கோவில் மணியோசையும் அதனுடன் இணைந்து காதுகளில் ஒலிக்கிறது. "குருவாயூரப்பா-நாராயணா" என்ற குரல்களும் தூரத்தே கேட்கின்றன. தினமும் காலை முதல் பக்தர்கள் வெள்ளம் ஆண்டவனை வணங்க அலைமோதுகிறது. அது முதல் தொடங்கும் பூஜை இரவு 10 மணி வரை நடைபெறுகிறது. குருவாயூரப்பன் கேரள மக்களின் முக்கிய தெய்வமானதால் இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர். கேரளத்தின் சிறப்புக்குரிய தென்னந் தோப்புகளின் இடையே குருவாயூர் காட்சி அளிக்கிறது. இங்கு சில தினங்கள் தங்கி இருப்பதால் உடலாலும், உள்ளத்தாலும் புத்துணர்ச்சி பெற்று இவ்வுலகக் கவலைகளை மறக்க முடிகிறது.

குருவாயூர் கோவிலில் உள்ள தெய்வம் கிருஷ்ண அவதாரத்தில் உள்ள மஹாவிஷ்ணுவாகும். குருவாயூர் என்பது குரு, வாயு என்ற சொற்களிலிருந்து வந்தவையாகும். குரு – பிரஹஸ்பதி–கடவுளின் குரு. வாயு-காற்றின் கடவுள். புராண வரலாற்றின்படி கிருஷ்ணன் துவாரகையில் இருந்தபோது தன் பெற்றோர்களுக்குப் பிறகு தனது உருவத்தை நிறுவி அதை, தானே வணங்கி வந்தார். இவ்வுலகை விட்டு கிருஷ்ணன் சென்றபோது, தன் சிஷ்யனை உதவாவிடம் "நான் இவ்வுலகத்தில் அவதரித்ததன் குறிக்கோள் முடிந்து, சொர்க்கத்திற்குச் செல்கிறேன். நானும் பிரஹஸ்பதியுடன் ஆலோசித்து ஒரு புனிதமான இடத்தில் என்னுடைய உருவத்தை நிறுவவும்" எனக் கூறிச் சென்றாராம். கிருஷ்ணன் சொர்க்கத்திற்குச் சென்ற பிறகு, உதவாவின் வேண்டுகோளின்படி, பிரஹஸ்பதி தன்னுடைய சிஷ்யனை வாயுவுடன் கிருஷ்ணனின உருவத்தை நிறுவ புனித இடத்தைத் தேடி, குருவாயூருக்கு வந்தனர். அந்தப் புனித இடம் 'குருவாயூர்' எனப் பெயர் பெற்றது.

குருவாயூர் செல்வச் செழிப்பாக இருந்த காரணத்தினால் அது பலரின் தாக்குதல்களுக்கு இலக்காகி இருந்தது. வரலாற்றின்படி. கி பி. 1716ல் ஸமோரியர்களுடன் (Zamorins) சண்டையிட்ட டச்சுக்காரர்கள், இக்கோவிலில் புகுந்து கொள்ளை அடித்தார்கள். அடித்தளங்களில் (Cellar) வைத்திருந்த செல்வங்களையும், கொடிமரத்தின் தங்கக் கவசங்களையும் எடுத்துக் கொண்டு கோவிலின் ஒரு பகுதிக்கு தீயும் வைத்துச் சென்றார்கள். ஆனால் பக்தர்களின் நன்கொடையினால் இந்த இழப்பு விரைவில் ஈடு செய்யப்பட்டது. பிறகு கி. பி. 1766ல் ஹைதர்அலி ஸமோரியர்களின் தலைநகரான கள்ளிக்கோட்டையை (Calicut)க் கைப்பற்றிய போது, குருவாயூரையும் கைப்பற்றினார் பிறகு ஹைதர்அலி. பத்தாயிரம் ரூபாய்க்கு இக்கோவிலை விட்டுக் கொடுத்தார். அதன் பிறகு 1789ல் மலபாரில் புகுந்த திப்பு சுல்தான் இக்கோவிலில் புகுந்து சிலைகளை அழித்தார். அவர் இக்கோவிலுக்கு தீ வைத்த போது, அச்சமயத்தில் உண்டான மழையினாலும், அசரீரியினாலும் கோவிலுக்கு அதிகக்கேடு வராது தடுக்கப்பட்டது. ஒவ்வொரு தாக்கு


தலுக்குப் பிறகும், பக்தர்களின் முயற்சியினால் இக்கோவில் பழைய நிலைக்குக் கொண்டு வரப் பட்டது என்பது இதில் குறிப்பிடப் பட வேண்டிய ஒன்ருகும்.

குருவாயூர் கோவிலில் உள்ள தெய்வத்தை பக்தர்கள் 'குருவா யூரப்பன்' என பக்தியோடு அழைக்கிருர்கள். பொதுவாக விஷ்ணுவின் உருவத்தை மூன்று வடிவங்களில் ஒன்றில் காணலாம். அவை ஸ்தானகா (நிற்பது), ஆசனா (அமர்ந்திருப்பது) சயனா (படுத்திருப்பது) ஆகியவையா கும். குருவாயூரப்பன் நின்ற வடிவத்தில் உள்ளார். இச்சிலை படாலா அஞ்சனம் (Patala Anjanam) என்ற ஒருவகைக் கல்லினுல், சிற்பசாஸ்திர முறைப் படி உருவாக்கப் பெற்றதாகும். விஷ்ணு கோவில்களில் உள்ளது போல, தன் பக்கத்தில் வேறு தெய்வங்களுடன் இல்லாது, இங்கு குருவாயூரப்பன் மட்டும் தனியாக எழுந்தருளியுள்ளார். விநாயகர், ஐயப்பன், துர்க்கா தேவி ஆகியவை இக்கோவிலுக் குள் தனியாக எழுந்தருளியுள்ள வேறு சில தெய்வங்களாகும். இங்குள்ள துர்க்காதேவி "இடத் தேடுத்து பகவதி" (இடது பாகத் தில் அமர்ந்திருக்கும் தேவி) என அழைக்கப் படுகிறது. புராணத் தின்படி குருவாயூரப்பன் தற்சம யம் எழுந்தருளியுள்ள மூலஸ் தானத்தில், துர்க்காதேவி தொடக்கத்தில் இருந்ததாகவும், குருவும், வாயுவும் குருவாயூரப்ப னின் உருவத்தைக் கொண்டு வருவது கண்டு அவ்வுருவத்தை தன்னுடைய இடத்தில் வைக்கும் படி கேட்டுக் கொண்டதாகவும், தான் இடது பாகத்தில் உள்ள இடத்திற்கு நீங்கிக் கொடுத்த தாகவும் கூறப்படுகிறது.

தென்இந்தியாவில் உள்ள சில கோவில்களைப்போல குருவா யூர் கோவில் மிகப்பெரியதல்ல. ஆனுலும் கிழக்கேயும், மேற்கே யும் இக்கோவிலுக்கு ஒவ்வொரு கோபுரம் இருக்கிறது. கோவில் கிழக்கே நோக்கி உள்ளது. பொது வாக பக்தர்கள் கிழக்கு வாயில் வழியாக கோவிலுக்குள் செல் கிருர்கள்.

இக்கோவிலில் ஆதிசங்கராச் சாரியார் கூறியுள்ள முறைப்படி. வழிபாடுகள் சிறப்பாக நடை— பெற்று வருகின்றன. தினமும் ஐந்து காலப் பூஜைகள் பெரிய குருக்களால் நடத்தப்படுகின்றன. தினமும் மூன்றுமுறை (காலை 7-30, மாலை 5-00, இரவு 8-00 மணி) கடவுளை யானைமேல் வைத்து ஸ்ரீவேலி (எழுந்தருளல்) நடைபெறுகிறது. ஸ்ரீவேலிக்கு சிறிய உத்சவ வகரஹத்தை யானைமேல் வைத்து, நாதஸ் வரம், மத்தளம் முழங்க கோவில் வெளிப்பிரகாரத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்கிருர்கள். முதல் சுற்றுக்கு பெரிய குருக்கள் வழி நடத்திச் செல்கிருர். மாலையில் நடக்கும் தீபாராதனை மிகவும் சிறப்பானது. பூக்களால் அலங கரிக்கப்பட்ட ஆண்டவனுக்கு, சந்திநேரத்தில் மத்தளம், நாதஸ் வரம், சங்கொலி முழங்க தீபாரா தனை நடைபெறுகிறது. நவம்பர் மாத பின்பாதிக்கும், டிசம்பர் மாதத்திற்கும் இடையில்வரும் ஏகாதேசி இங்கு நடைபெறும் சிறப்பான திருவிழாவாகும்.

பக்தர்கள் செலுத்தும் வழி பாடு ஒரு ரூபாய்க்குரிய அர்ச்சனை முதல், ரூபாய் பத்தாயிரத்திற் குரிய உதயஸ்தமான பூஜை (சூரிய உதயம்முதல் அஸ்தமனம் வரை) வரை வேறுபடுகிறது. வெளிப்பிரகாரத்தில் வழிபாடு களின் விவரங்கள் விளம்பரம் செய்யப்பட்டுள்ளன. காணிக்கை களில் முக்கியமானது துலாபார மாகும். இதில் வேண்டிக்கொண் டவரின் எடைக்குஎடை வாழைப் பழமோ, ஜீனியோ, தேங்காயோ, சந்தனக்கட்டையோ காணிக்கை யாகக் கோவிலுக்குச் செலுத்து கிருர்கள். மேலும் குழந்தை களுக்கு முதன்முதலாக சோறூட் டும் நிகழ்ச்சி இங்கு மொத்தமாக நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சி யில் குருக்கள் கொடிமரத்தின்



ஸ்ரீ குருவாயூரப்பன்

அருகில் இருந்துகொண்டு குழந்தைகளுக்கு தீர்த்தம், வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல் முதலியவைகளை வழங்குகிறார்.

குருவாயூரப்பனின் சந்நிதானத்தில் தினமும் நூற்றுக்கணக்கான திருமணங்களும் நடைபெறுகின்றன.

கிருஷ்ணாட்டம் என்ற நாட்டிய நாடகம் இங்கு நடக்கும் கலை நிகழ்ச்சிகளிலும், கதாகாலேட்ச-பங்களிலும் சிறந்ததாகும்.

பக்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றிவைக்கும் தெய்வமாக, குருவாயூரப்பன் திகழ்கிறார். அவரது புகழ் உலகமெல்லாம் பரவியிருக்கிறது.

குருவாயூரை அடுத்துள்ள புகைவண்டி நிலையம் திருச்சூராகும் (29 கி. மீ). அருகில் உள்ள விமான நிலையம் - கொச்சி. தனியார் மற்றும் கேரள அரசின் பேருந்துகள் கொச்சியிலிருந்து குருவாயூர் செல்கின்றன.

ஆதாரம் :
''இந்தியன் எக்ஸ்பிரஸ்''

ஹைதராபாத் சங்கம்

ஹைதராபாத், செகந்தராபாத் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூக, பண்பாட்டுக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டம் 1-1-89 அன்று கூட்டப் பெற்றது. அன்று திரு. இராம. பழ. அருணசலம் இல்லத்தில் முருகன் பூஜை கொண்டாடப் பெற்றது. அதனைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டிற்கு செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப் பெற்றனர். திரு. சுப. ஆறுமுகம் செட்டியார் தலைவராகவும் திரு. என். சிதம்பரம் துணைத் தலைவராகவும் திரு. அழ. வெங்கடாசலம் செயலாளராகவும் திரு. எஸ்பி. இராமநாதன் உதவிச் செயலாளராகவும் திரு. ஏஆர். அருணசலம் பொருளாளராகவும் மற்றும் ஆறுபேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

சதாபிஷேகம்

சொக்கலிங்கம் புதூர் மு. அரு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் சதாபிஷேகம் 28-12-88 அன்று சொக்கலிங்கம் புதூரில் சிறப்பாக நடைபெற்றது. சதாபிஷேக விழாவில் தொழில் அதிபர்கள், திரைப்பட வினியோகஸ்தர்கள், பிரமுகர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் எல். என். லெட்சுமணன் அவர்கள் மாலையும், பட்டும் அணிவித்துக் கௌரவித்தார்.

அன்று கட்டினோம்; இன்று பிரிக்கிறோம்

முனைவர் சுப. அண்ணாமலை

அரண்மனை போன்ற அழகிய வீடுகள் கூரை பிரித்து, நிலை கதவு, சன்னல் இன்றிக் குட்டிச் சுவராக நிற்கும் அவலக் காட்சியை, இன்று செட்டி நாட்டில் எல்லா ஊர்களிலும் காண்கின்றோம். முன்பு ஒரு காலத்தில் குடிசைகளில் வாழ்ந்த நகரத்தார், தளராத வாணிக முயற்சியாலும் சிக்கனச் செலவு முறைகளாலும் செல்வம் சேர்த்துப் பெரிய வீடுகளைக் கட்டினர். சோழ நாட்டில் மன்னன் செய்த அநீதியால், அங்கிருந்து வெளியேறி வந்தவர்கள் ஆதலால் கடுமையாக உழைத்து, செல்வ வாழ்வை மீண்டும் அடைந்து, கூட்டு வாழ்க்கை வாழ்வதற்காகவும், சோழ மன்னனுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவும் அரண்மனையாக வீடுகளைக் கட்டினர். இதனை,

"காடுவெட்டிப் போட்டுக்
கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும்
வேள்வணிகர் — வீடுகட்கு
அன்றைக்கு வந்திட்ட
அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு"

என்று பாடுவார் முத்தப்ப செட்டியார் கூறினார். செட்டியார்களின் கடுமையான உழைப்பு இப்பாடலால் தெரியவரும். நம் நாட்டில் மட்டுமல்ல. இலங்கையிலும், பர்மாவிலும் நம்மவர்கள் காடுவெட்டிப் போட்டார்கள்; கடிய நிலம் திருத்தினார்கள். பண்டமெல்லாம் பாய்மரக் கலத்தில் ஏற்றிச் சென்று விற்றார்கள். செட்டி நாட்டில் செல்வம் கொழிக்கச் செய்தார்கள்.

பாடுபட்டுக் கட்டிய வீடுகள் இன்று பிரிக்கப்படுகின்றன. காரணம் வணிக முயற்சி 80 சதவீதம் குறைந்துவிட்டது. நம் சடங்குகளை - திருமணங்களைச் சிக்கனமாக நடத்த முடிவதில்லை. செலவிற்கு வழியின்றிக் கூரையைப் பிரிக்கத் தொடங்கி விட்டோம். அன்று கட்டினோம்; இன்று பிரிக்கிறோம்.

இன்று நம்மவரில் சம்பளத்திற்குப் பணி செய்பவரே மிகுதி. அந்தப் பணியும் கிடைக்காமல் பாத்திர பண்டங்களை விற்றுச் சுட்டுத் தின்பவர் மிகப் பலர். பழைய சாமான் கடைகள், செட்டி நாட்டின் மையமான காரைக்குடியில் பெருகி வருகின்றமை, நம் அவல நிலையைப் பறைசாற்றி வருகின்றது.

இவற்றை எல்லாம் பார்த்தும் கூட, ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்ட ஒரு வீட்டைப் பிரிக்க வேண்டிய கொடுமையைக் கண்டும் கூட. சமூகத்தின் இந்த வறுமையை ஏதோ சில தனிப்பட்டவர்களின் வறுமை என்று நமது சமூகத்தாரே நினைப்பது வேதனை தருகிறது. நம் சமூகம் வறுமையடைந்துவிட்டது என்ற 'சமூக உணர்வு' இல்லை. இந்த வறுமையால் சீரழிந்து விடாமல் காத்துக்கொள்ள 'சமூக அளவில் முயற்சிகள்' தோன்றவில்லை. ''அவரவர் கஷ்டத்தை அவரவர் பார்த்துக் கொள்க; சமூகப் பழக்க வழக்கத்தை மட்டும் விடக்கூடாது''—என்று நினைக்கிறார்களே தவிர, சமூகம் முன்னேற ஒட்டுமொத்தமான முயற்சியை

மேற்கொள்ளவில்லை. நமது சமூகத்தின் பழைய வரலாற்றில் இப்படி அலட்சியமாக ஒரு காலத்திலும் இருந்ததில்லை. சமூகத்தின் மானத்தைக் காக்க, ஒக்கூரார் கூடுநலாக ஒருதலையைக் கொடுக்க முன்வந்த சமூக உணர்ச்சி இன்று எங்கே?

அங்கங்கே சங்கக் கூட்டங்களில் சீர்திருத்தம் பேசுகின்றார்கள். ஆனால் காரியத்தில் மேற்கொள்வதில்லை. ஏன் காரியத்தில் நடைபெறுவதில்லை? இதற்குக் காரணம் சமூக உணர்ச்சி இல்லாமைதான்! சமூகப் பழக்க வழக்கங்களில் சிக்கனம் இல்லாமைதான். 'சமூகம் கெட்டு வரும் போது, ஆடம்பரச் செலவு செய்து சமூகக் காரியத்தை நடத்த பணக்காரருக்கு உரிமை இல்லை; நடத்தினால் அது சமூக விரோதம்' என்ற உணர்ச்சி இல்லாமைதான்.

உலகப் போர்களுக்கு முன், பல ஆண்டுகளாக அயல் நாட்டு வாணிகத்தால் நம் சமூகத்தார் செல்வம் சேர்த்தபொழுது, கைக்கொண்ட தவறான பழக்கங்கள் இரண்டு. ஒன்று, செல்வச் செழிப்பைக் காட்டிக் கொள்வதற்கு என்றே திருமணம் முதலிய விசேடங்களை ஆடம்பரமாகச் செய்தது. மற்றொன்று, ஒவ்வாருவரும் செல்வராக இருந்ததால், சமூகப் பொதுமை உணர்வு குறைந்து, தனிப்பெருமை உணர்ச்சி அதிகம் ஆகியது. இதனால் ஒற்றுமை குறைந்தது. சமூகக் கட்டு (*Solidarity*) இல்லாமல்போயிற்று.

செல்வக் காலத்தில் நாம் வளர்த்து விட்ட இந்தத் தவறுகள் இந்த வறுமைக் காலத்தில் நம் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாய் — நம்மவரில் செல்வர், மற்றவர்களின் வறுமையை எண்ணிப் பாராத நிலையை உண்டாக்கி விட்டன. நம்மவரில் வறிய வரும் அதிகச் செலவு செய்துதான் திருமணம் செய்ய ஆசைப்படுகிறார். இது பொய் மரனம் அல்லவா?

இதன் விளைவு என்ன? நம்மவர் வீடுகளில் மூன்று, நான்கு என்ற எண்ணிக்கையில் பெண்கள் திருமணம் ஆகாமல் இருப்பது தான். இது கொடுமை அல்லவா? அந்தப் பெண்களின் நந்தை செய்த பாவம் என்ன? காலத்திற்கு ஏற்ப, சமூகப் பழக்க வழக்கத்தை மாற்றிக் கொள்ளாததால் வந்த கொடுமையல்லவோ இது? பெண்களின் திருமணத்திற்குத் தடை, இன்று நிலவும் வரதட்சிணைத் தொகை விகிதத்தைக் கொடுக்க வகையில்லாததுதான்.

நாடெங்கும் வரதட்சிணைப் பழக்கம் இருப்பதும், அதனால் சித்திரவதை முதலிய கொடுமைகள் நடப்பதும் தினத்தாள்களில் வருகின்றன. அதுபோல நம் சமூகத்திலும் இருக்கிறது என்று சமாதானம் சொல்வதால் பயன் இல்லை வசதியுள்ள தனிப்பட்டவர் வரதட்சிணை கொடுப்பது வேறு; வரதட்சினை கொடுத்தால்தான் திருமணம் என்ற நிலை இருப்பது வேறு

நமது சமூகத்தில் வரதட்சிணை என்பது, ஒரு காலத்தில் பெயருக்கு இருந்து வந்தது. இசைபிடிமானத்தில் வெள்ளாட்டிக்கு பணம் என்று எழுதுவதால் இதை அறியலாம். பின்பு பெண்ணுக்கு வராகன் கணக்கில் வாங்கி வராகன் ரூ. 3-50 ஆக இருந்ததை பெரிய வராகன் (ரூ. 3500) ஆக்கி விட்டனர். சொ. முருகப்பா, வை. சு. சண்முகம் முதலிய தலைவர்களின் தலைமையில் தொண்டர்கள், பெண்ணுக்கு 'வாங்கும்' கலியாண வீடுகளின் முன்பு மறியல் செய்தனர். அந்தப் பழக்கம் மாறி மாப்பிள்ளைக்கு வாங்கும் பழக்கம் தோன்றி அசுரரூபம் எடுத்துப் பயமுறுத்துகிறது. சீரழிக்கிறது. வீட்டைப் பிரிக்க வைக்கிறது. நமது மரபுப்படி இசைபிடிமானம் எழுதும்போதாவது நமக்கு உணர்ச்சி வரவேண்டாமா? நம் மரபில் இல்லாததை ஏன் வளர்த்

துக்கொண்டு தொல்லைப்பட வேண்டும்?

மாப்பிள்ளைக்கு வாங்கும் பழக்கம் என்னகாரணத்தால் தோன்றியிருந்தாலும். இன்று தொகைகள் ஏறிவிட்டதற்கு ஒரே காரணம் தான் உண்டு வரதட்சிணைப் பணத்தை வாங்கி யாரும் வங்கியில் போடுவதில்லை. 8 வராகன் வாங்குவோர் 6பட்டுச்சேலை பெண்ணுக்கு எடுத்தால், இலட்ச ரூபாய் வாங்குவோர் 16 சேலை எடுக்கிறார்கள். இரண்டு வகையாரும் தமது தரத்திற்கு மீறிய வகையில் விருந்தினரை அழைத்து விருந்து நடத்தி, ஆடம்பரச் செலவு செய்கின்றார்கள். ஆக, வரதட்சிணை திருமணத்திற்குச் செலவாகி விடுகிறது. சமூகக் கட்டாயம், அவரவர் தகுதி—இவற்றினால் வரதட்சிணைப் பணத்தை 'ஆடிவிடுகிறார்களே' தவிரச் சேமித்து வைப்பதில்லை. இவ்விரண்டிற்காகச் செலவு செய்வதை நிறுத்தினால், வரதட்சிணை வாங்கவேண்டியதில்லை.

இன்று நம் சமூகத்தில் இருக்கும் திருமணச் செலவுப் பழக்கத்தில் சாதாரணமான ஒருவர் குறைந்த செலவில் திருமணம் செய்வது என்றாலும் 1 இலட்சம் ரூபாய் செலவாகும். மாதம் 2000 ரூபாய் சம்பளம் வாங்குபவரும் பெருங்கடன் வாங்காமல் தன் பெண்ணுக்குத் திருமணம் செய்ய முடியாது. இந்நிலை நீடித்தால் நம் சமூகப் பெண்கள், ஒன்று தாமே கலப்புத் திருமணம் செய்து கொள்வார்கள். பதிவாளர் அலுவலகச் செலவு மட்டும் தான். அல்லது பெற்றோரே கலப்புத் திருமணம் செய்து வைத்து விடுவார்கள். திருமணம் நடைபெறாமல், ஒழுக்கக் கேடு வளர்ந்தாலும் வியப்பில்லை.

இந்த நிலை வராமல் தடுக்க வரதட்சிணை வாங்காமல் தடுப்பது தான் வழி என்று எல்லோரும் எளிதாகச் சொல்லி விடுவார்கள். யார் தடுப்பது? யார் வாங்காமல் இருப்பார்கள்? பெண்ணுக்குத் திருமணம் செய்யும்போது, சீர்திருத்தத்தை எதிர்பார்க்கும் தந்தை தன் பையனுக்குத் திருமணம் செய்யும்போது வாயை மூடிக்கொள்வார். இதுவரை பேசிய சீர்திருத்தங்கள், ஏற்படுத்திய கட்டுகள் எல்லாம் தோற்றுப் போனதற்குக் காரணம் ஒன்று தான். அது வரதட்சிணையின் மூல காரணத்தைச் சிந்திக்காமல், அதை ஒழிக்கவேண்டும் என்று வாளா பேசி வந்ததுதான்,

மூல காரணம் நம்மவரின் திருமணச் செலவும் பழக்கமுமே

ஆகும். முடியுமோ, முடியாதோ இவற்றைச் செய்தே ஆகவேண்டும் என்ற சமூகக் கட்டாயம் இருக்கிறது. இவை எல்லாவற்றையுமே புனிதமான திருமணச் சடங்காக எண்ணிக் கொண்டிருக்கிறோம். செய்யாவிட்டால் 'நாலு பேர்' என்ன சொல்லுவார்களோ என்று பயப்படுகிறோம். அந்த நாலுபேர் யார்? நாம்தான். நமக்குள்ளேயே ஒருவரை ஒருவர் நினைத்துப் பயப்படுகிறோம் நமது இன்றைய பொருளாதார நிலைக்கு ஒவ்வாத செலவுகளை நாமே நம்மீது சுமத்திக் கொண்டு சமூகத்தில் நமது 'மானத்திற்கு' அஞ்சிச் செலவு செய்து, சீரழிந்து கொண்டிருக்கிறோம், இது அறிவுடமையாகுமா?

உண்மையகன திருமணச் சடங்கில் அந்தணருக்கு மட்டும் தான் பணம் கொடுக்கிறோம். அந்தத் தொகை மிகவும் குறைவு. ஆனால் பாத்திரம், பண்டம், நகை, பீரோ, கட்டில், சேலை, வேட்டி, மாப்பிள்ளை சாமான்கள் சீர்வகை முறைகள் முதலியவற்றிலும் உறவினர்களையும் ஊராரையும் அழைத்து நான்குவேளை ஆடம்பர விருந்து வைத்து, அதற்கு 'செட்' சமையற்காரர் வைப்பதிலும், கொட்டகை போடுவதிலும் அதிகமாக அநியாயமாகச் செலவு செய்கிறோம். அதை ஈடுகட்ட விலையேற்றத்திற்குத் தகுந்தாற்போல், வரதட்சிணைத் தொகை ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே வரதட்சிணை பொய்க் கௌரவத்தால் உண்டாகிய பொருளாதாரச் சிக்கலே தவிர, திருமணச் சிக்கல் அல்ல. சமூக உணர்ச்சி இல்லாமையால் பொய்க் கௌரவ உணர்ச்சி வளர்கிறது.

நம்மவரின் திருமணத்தில் முற்காலங்களில் நம் பெண்களே சமைத்ததையும், அவர்களே பரிமாறியதையும் கேள்விப் பட்டிருக்கிறோம். வைக்கோற்போரின் அடியில் திருமணம் நடந்தது என்று கேள்விப்படுகிறோம். நாமும் அவ்வாறு எளிமையாக நடத்தினால் என்ன? நம் கண் முன்னேயே எத்தனை திருமணங்கள் கோயிலில் மாலை மாற்றுவதோடு முடிந்து விடுகின்றன? அவையெல்லாம் நல்வாழ்வாக மலரவில்லையா? ஆகவே வாதட்சணை ஒழிவதற்குத் திருமணச் செலவை மிகுதியும் குறைப்பது ஒன்றே வழி. அதற்குச் சில யோசனைகள் வருமாறு:-

நகரத்தார் யாவரும்,

1) திருமணத்தை மணப் பெண்ணின் குடும்பத்திற்குரிய கோயிலில் நடத்துவது.

2) உறவினர்களை மட்டும் அழைப்பது. அழைப்பு அச்சிடுவது இல்லை. கடிதம் எழுதுவது.

3) கோயிலை ஒட்டிய நகர விடுதியில் ஒரு வேளைச் சாப்பாடு எளிய முறையில், நம் பெண்களே சமைத்து அவர்களே பரிமாறுவது. ஆண்கள் காய்கறிகள் நறுக்கிக் கொடுப்பது. (முன்பு இப்படி நடந்திருக்கிறது)

4) பெண்ணுக்குத் திருமாங்கல்யம் மட்டும் தங்கத்தில் செய்து மஞ்சள் கயிற்றில் கோப்பது, தங்கத் தோடும் இரண்டு காப்பும் தவிர வேறு நகை செய்வதில்லை. அவளுக்கு இரண்டு நூற்புடவை இரண்டு ரவிக்கை எடுப்பது.

5) மாப்பிள்ளைக்கு ஒரு வேட்டி. ஒரு துண்டு, ஒரு தங்க மோதிரம் அளிப்பது.

6) சாத்திர முறைப்படி அந்தணரைக்கொண்டு ஓமம் வளர்த்து திருமணச் சடங்கும் நம் பெண்கள் செய்யும் சடங்குகளும் செய்வது.

இந்த ஆறும் ஆறு கட்டளையல்ல. ஆலோசனைகள்தாம். பெற்றோரும் மாப்பிள்ளைப் பையனும் பொருளுக்கு ஆசைப்படாமல் நகரத்தார் சமூகப் பெண்ணின் வாழ்க்கை நலம் மட்டுமே கருதி, இந்த ஆலோசனைகளைக் கைக்கொண்

சோக்கலிங்க மஹாத்மியம்

முனைவர் முத்துநாகப்பன், காரைக்குடி

'நான்மாடக்கூடல்' என்று புகழப்படும் நன் மதுரையில் மங்கல மங்கை அன்னை மீனாட்சி கொலுவிருக்கும் காட்சி வார்த்தைகளின் வர்ண ஜாலங்களால் வர்ணிக்கப்படும் எல்லையைக் கடந்து நிற்பது. அங்கயற்கண்ணியின் அருள்நோக்கியதால் மக்களின் வாழ்வு வளமும் செறிவும், வன்மையும் திண்மையும் பெற்றுச் செழிப்புடன் விளங்கியது.

அன்னை உமைக்கு இடப்புறம் இடம் தந்து பார்வதி பரமேஸ்வரனாகவும், உடலிலே சரிபாதியை ஈந்து சக்தியும் சிவமும் இணைந்து இரண்டறக் கலந்து ஒன்றியமாகி அர்த்தநாரீஸ்வரனாக உலகுக்கு காட்சி தந்த பீடும் பெருமையும் பெற்ற லோகநாயகன் மதுரையம் பதியில் ஒருபுறம் தனித்து அமைதியாகவும் அடக்கமாகவும் அமர்ந்திருந்தாலும் அவர்தம் பெருமை, திருவிளையாடல்கள் எண்ணிலடங்காத எழுத முடியாத எல்லைக்கு அப்பாற்பட்ட தனிச் சிறப்பு வாய்ந்தவை,

அதிலே ஒரு சிறு துளி—

வைகறைப் பொழுதிலே ஒருநாள் மதுரையில் அன்னை மீனாட்சி ஆலயத்தின் பொற்றாமரைக் குளத்திலே வறுமையின் எல்லைக் கோட்டிலே நிற்கும் இருவர் நீராடிக் கொண்டிருந்தனர். இருவரும் பெரும் புலவர்கள், 'இரட்டையர்கள்' என்று பெயர் பெற்றவர்கள். ஒருவர் பெயர் இளஞ்சூரியன்; பார்வையை இழந்தவர். மற்றவர் பெயர் முதுசூரியன்; கால்கள் ஊனமுற்றவர்.

இளஞ்சூரியன் தமது மேல் துண்டை (மிகவும் பழமையானது) நீரில் துவைத்து அடித்து அலசும் பொழுது கண் தெரியாத நிலைமையில் அது சிறிது விலகி நீரிலே அமிழ்ந்து போயிற்று. அதனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டதை

டால் கன்னிப் பெண்களின் கண்ணீர் மாறும். வியாபாரத்திற்கு வழியின்றி வேலைகளில் அமர்ந்துள்ள 60 சதவீதம் ஆண்கள் சுமை குறைந்து, வாழ்வில் முன்னேறுவர். பணி செய்யும் ஊரில் ஒரு வீடும் கட்டுவர் அல்லது முன்பு கட்டினோம், இன்று பிரித்தோம் என்றில்லாமல் உள்ள வீட்டைப் பேணி விளக்கேற்றுவர்.

நகரத்தார் சிந்திப்பார்களா?

நன்றி : கும்பகோணம் நகரத்தார் சங்கச் சிறப்பு மலர் 1983

அருகே குளித்துக் கொண்டிருந்த முதுசூரியன் பார்த்து சிறிது நகைத்துவிட்டு—

''ஐயா, தப்பு, தப்பென்று நாம் அதனை தப்பினால் நம்மை அது தப்பாதோ''என்று குறும்பாகக் கவி பாடினார்.

இளஞ்சூரியன் பதிலுக்கு—

''ஆனாலும் கந்தை அதிலும் ஓர் ஆயிரம் கண் போனால் துயர் போச்சு போ''என்றார்

முது சூரியன் விடாப்பிடியாக—

''கண்ணாயிரம் படைத்த கந்தையே ஆனாலும்
தண்ணார் குளிர்படத் தாங்காதோ''

என்றார்.

இளஞ்சூரியனும் சளைக்கவில்லை.

''இக்கலிங்கம் போனால் என்ன என் மாமதுரை
சொக்கலிங்கம் உண்டே துணை''

என்று சொக்கேசர் சன்னதியை நோக்கி வணங்கவும் இறைவன் அருளால் நீரின் மேற்பரப்பிலே புதியதோர் துண்டு மிதந்தது. அதுசமயம் இந்த அதிசயத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்ட ஆலயக் காவலர்கள் அரசனுக்கு இத் தகவலைத் தெரிவித்தனர். பாண்டியன் அரண்மனையில் இருந்து புலவர்களைச் சகல மரியாதைகளுடனும் அழைத்துவர ஆணை பிறந்தது.

மன்னரின் அத்தாணி மண்டபம் நிறைந்து காணப்பட்டது. அமைச்சர், பிரதானியர், முதலியோர் புடை சூழ அரசன் அமர்ந்திருக்க அவன் எதிரே இரண்டு ஆசனங்கள் போடப்பட்டு நடுவில் தடித்த திரைச்சீலை தொங்கவிடப் பட்டிருந்தது. (காரணம் மன்னர்க்ள் அங்கத்தில் ஊனம் உடையவர்களை நேரடியாகச் சந்திக்கக் கூடாது என்பது பண்டைய மன்னர்கள் மரபு என்று அமைச்சர் கூறியதுதான்)

மரியாதைகளுடன் அழைத்து வரப்பட்ட புலவர்கள் இருவரும் ஆசனத்தில் அமர்ந்தனர். முதுசூரியன் மட்டும் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு முகத்தில் புன்னகை தவழ ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறி அமர்ந்தார். இது காதில் விழுந்தவுடன் துணுக்குற்ற இளஞ்சூரியன் ''திரையா போட்டிருக்கிறது?'' எனக் கேட்டு ஆசனத்தில் நெளியவே—

புலவர்களின் ஆழ்ந்த அறிவையும் சமயோசித புத்தியையும் கண்டு வியப்படைந்த மன்னன் திரையை அகற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிட்டு புலவர்களுடன் நேரடியாகவே பேசி, கலந்து உரையாடி மகிழ்ந்து ஏராளமான பரிசில்களை வழங்கி அவர்களை மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தான்.

காரைக்குடியில் பாவை விழா

காரைக்குடி அருள்மிகு கொப்புடையநாயகி அம்மன் கோயிலில் 12-1-89 அன்று காரைக்குடி காவல்துறை உதவிக் கண்காணிப்பாளார் திரு. பி. கோபால கிருஷ்ணன் தலைமையில் பாவை விழா நடைபெற்றது. அறங்காவலர் குழுத்தலைவர் திரு. என். ஏ. மாரிமுத்துப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார் 'பாவையர் விரும்பும் பாவை' எனும் தலைப்பில் 'புலவர் மாமணி' திரு. மா. முத்துராமன் சிறப்புரையாற்றினார். மாணவ, மாணவியருக்கு காவல்துறை அதிகாரி பரிசுகளை வழங்கினார். நிர்வாக அதிகாரி திரு. எஸ். கே. மீனாட்சி சுந்தரம் நன்றி கூறினார்.

திருமணம்

குளிபிறை நா. முருகப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி நாச்சம்மை என்ற சாந்திக்கும் நற்சாந்துபட்டி இராம. வள்ளியப்பச் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் இராமநாதன் (M.Com.)க்கும் 18-1-89 அன்று குளிபிறையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தேசிய சாதனை வீரர் ஆனந்த நடராஜன்


திரு. ஆனந்த நடராஜன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பார்மஸி பட்டப் படிப்பில் மூன்றாம் ஆண்டு பயின்று வரும் மாணவர். 20 வயது இளைஞரான இவர், அண்மையில் கள்ளிக் கோட்டையில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகங்களிடையிலான ஓட்டப் பந்தயங்களில் நான்கு தங்கப் பதக்கங்களைத் தட்டிச் சென்று சாதனைகள் புரிந்திருக்கிறார். (இப்போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த 13பல்கலைக் கழகங்கள் பங்கேற்றன.)

திரு. ஆனந்த நடராஜன் 100 மீட்டர்கள் தொலைவை 10. 7 விநாடிகளிலும் (தமிழகச் சாதனை அளவு 10. 9 விநாடிகள்) 200 மீட்டர்கள் தொலைவை 21. 6 விநாடிகளிலும் (22 ஆண்டுக்கால அகில இந்தியச் சாதனை 21. 7 விநாடிகள்) கடந்து முந்திய சாதனைகளை வென்றிருக்கிறார். 4 x 100 மீட்டர்கள் தொடர் ஓட்டத்தில் இவரது குழு 42. 4 விநாடிகள் எடுத்துக் கொண்டு முதலிடம் பெற்றுள்ளது. பஞ்சாப் மாணவர் ஒருவரும் திரு ஆனந்த நடராஜனும் தனி நபர் 'சாம்பியன்' பதக்கத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

தொலைக்காட்சி, வானொலி, ஆங்கில மற்றும் தமிழ் நாளிதழ்கள் இவரது சாதனைகளை வெகுவாகப் பாராட்டியுள்ளன. இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் வாழ்த்துத் தந்தி அனுப்பியிருக்கிறார்கள் துணை வேந்தர் பேராசிரியர் இராம. சேதுநாராயணன் அவர்கள் 11-1-89 அன்று பல்கலைக் கழகத்தில் இவருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள்.

டோக்கியோ நகரில் 1989 ஜூலை-ஆகஸ்டில் நடைபெற உள்ள உலகப் பல்கலைக் கழகங்களிடையேயான ஓட்டப் பந்தயப் போட்டிகளில் நம் நாட்டுப் பிரதிநிதிகளாகப் பங்கேற்கும் இருவரில் திரு. ஆனந்த நடராஜனும் ஒருவர் என அறியும்போது நமக்குப் பெருமை ஏற்படுகிறது. (இதற்கான முழுச் செலவையும் இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம் ஏற்றுக் கொள்கிறது.)

திருச்சியில் ஆர். என். கிருஷ்ணன் மேல்நிலைப் பள்ளியில் ஒன்



பதாம் வகுப்புப் படிக்கும்போதே ஓட்டப் பந்தயங்களில் வென்று பல பரிசுகளைக் குவித்த இவர். பள்ளியின் ஹாக்கிக் குழுத் தலைவராகவும் கூடைப்பந்துக் குழுத் துணைத் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

தனது வெற்றிக்குப் பெரிதும் துணை நின்றது பயிற்சியாளர் திரு. கே. வைத்தியநாதனின் (உடற்பயிற்சியியல் துறை விரிவுரையாளர்) அளித்த ஊக்கம் என இவர் மிகுந்த குரு பக்தியோடு குறிப்பிடுகிறார்.

விளையாட்டில் சாதனைகள் புரிந்து வரும் ஆனந்த நடராசன்

பள்ளி இறுதித் தேர்வில் (CBSE) 78 சதவிகிதமும் பட்டப் படிப்பில் 70.5 சதவிகிதமும் மதிப்பெண்கள் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடியாபட்டி திரு. என். இரத்தினம் செட்டியார்-திருமதி வள்ளியம்மை ஆச்சியின் புதல்வரான திரு. ஆனந்த நடராஜன் டோக்கியோவில் நடைபெற உள்ள உலகப் பல்கலைக் கழகப் போட்டிகளில் வென்று பரிசுகள் பல பெற வாழ்த்துவோம்.

நேர்முகம் : அரு. இராமநாதன்.

கண்ணாத்தாள் ஆச்சி இயற்கை எய்தினார்

தொழிலதிபரும் ஒக்கூர் ஊராட்சி மன்றத்தின் தலைவரும் மதுரைத் தமிழிசைச் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவரும் ''நகரத்தார் குரல்'' இதழின் ஆலோசனைக் குழு உறுப்பினருமான ஒக்கூர் சிக. அரு. க. அரு.



சோம. இராமநாதன் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி கண்ணாத்தாள் ஆச்சி அவர்கள் தமது 63ஆவது வயதில் 12-1-89 வியாழன் இரவு மதுரையில் இயற்கை எய்தினார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கண்ணாத்தாள் ஆச்சி அவர்கள் பாகனேரி கா. சுப. சு. கதிரேசன் செட்டியார் அவர்களின் புதல்விகள் நால்வரில் ஒருவராவார்கள். தெய்வ பக்தி மிக்கவர்கள்.

இவர்களுக்குக் கணவரும் மகன் திரு. சோமசுந்தரமும் செல்விகள் உமா. கண்ணாத்தாள், மீனாள் என்கிற பேத்திகளும் உள்ளனர்.

இவர்கள் ஒக்கூரில் உள்ள சோமசுந்தரம் செட்டியார் உயர்நிலைப் பள்ளி, சோமசுந்தரம் செட்டியார் தொடக்கப் பள்ளி ஸ்ரீ கண்ணாத்தாள் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை கிருஷ்ண வேணி ரோடுவேஸ், ஸ்ரீ கண்ணாத்தாள் டிரான்ஸ்போர்ட் மற்றும் பல தொழில் நிறுவனங்களில் இயக்குநராகவும் பங்குதாரராகவும் இருந்து வந்தார்கள்.

ஒக்கிடுதல்

ஒரு பொருள் பழுதுற்றது (கெட்டுப்போனது) என்றால் அதைச் சரி செய்வதை 'REPAIR' என ஆங்கிலத்தில் சொல்வார். இதைப் பல வட்டாரங்களிலும் தமிழ் மக்கள் பலவேறு மாதிரியாகச் சொல்வார்கள். நகரத்தார்கள் அதனை நல்ல தமிழில் ''ஒக்கிடுதல்'' என்று கூறுவர். பழுதில்லாத, சரியான நிலையில் (proper) உள்ள பொருளுக்கு இணையான நிலையில் பழுதுற்ற பொருளின் குறைகளை நீக்கி, ''ஒக்க இடுதல்'' என்று அதற்குப் பொருள். (ஒக்க = to be equal)

— கவிஞர் இராகவன்முத்து
காரைக்குடி

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என். சிதம்பரம்

—37—

வாஷிங்டனிலிருந்து காரில் புறப்பட்டு நியூயார்க் வந்துசேர்ந்தோம் அமெரிக்காவிலே நியூயார்க் பெரிய நகரமாக இருந்தாலும், சற்று சிறிய அழகிய நகரமாகிய வாஷிங்டன் தான் தலைநகராக இருக்கிறது. மிக உயரமான கட்டிடங்கள் நியூயார்க்கிலே அதிகம். அமெரிக்காவில் சாலைகள் சுத்தமாக இருக்கும். ஆனால் நியூயார்க் நகரத்தில் அதற்கு நேர்மாருக இருக்கும். எங்கு பார்த்தாலும் குப்பையாக இருக்கும். சில இடங்கள்தான் சுத்தமாக இருக்கும்.

கோட்டையூரைச் சேர்ந்த திரு. அழகப்பன் அவர்கள் அங்கு குடும்பத்துடன் வசிக்கிருர்கள். அவர்கள் எங்களை அவர்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி தந்தார்கள். ஐக்கியநாடு சபையில் பணிபுரியும் அவர்கள் எங்களை அழைத்துச் சென்று ஐக்கிய நாடு சபைக் கட்டிடத்தைக் காண்பித்தார்கள். நியூயார்க்கிலே ஒரு பிள்ளையார் கோவிலை மிகப் பெரிய அளவிலே கட்டியிருக்கிருர்கள். அந்தக் கோயிலைக் கட்டியதில் நமது அழகப்பன் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அந்தக் கோயிலின் டிரஸ்டியாகவும் அவர்கள் இருந்தார்கள். எங்களை அழைத்துச் சென்று அக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்து வைத்தார்கள். திரைப்பட நடிகை பத்மினியும் நியூயார்க்கிலே நடனப் பள்ளி ஒன்றை நடத்தி வருகிருர்கள். அவர்களும் திரு. அழகப்பன் குடும்பத்தாரும் உறவினர்களைப் போல பழகி வருகின்ருர்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு பத்மினியைச் சந்தித்த போது சென்னை திரைப்பட உலகைப் பற்றியும் திரை உலக நண்பர்களைப் பற்றியும் மிகவும் ஆர்வத்துடன் விசாரித்தார்கள்.

சிறு கப்பலில் லிபர்ட்டி சிலை இருக்கும் இடத்திற்குச் சென்ருேம். மிக உயரமான சிலை அது. அதைப் பார்த்தபோது எனக்கு மகாபலிபுரம்தான் என் நினைவில் வந்தது.

யு. எஸ். ஓபன் டென்னிஸ் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. உலக நாடுகளில் உள்ள மிகச் சிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்களெல்லாம் வந்து அதில் கலந்து கொண்டார்கள். நானும் கல்லூரி நாட்களிலிருந்து டென்னிஸ் விளையாடி வருகிறேன். என் மகன் வள்ளியப்பனும் டென்னிஸ் விளையாடுவான். நானும் டென்னிஸ் பந்தயத்தைப் பார்க்க வேண்டுமென்று என் மகனிடத்திலே சொன்னேன். அதற்கு என் மகனும் “இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே டிக்கெட் வாங்கியிருக்க வேண்டும் இப்பொழுது டிக்கட் கிடைப்பது சிரமம். எதற்கும் விளையாட்டு

மைதானத்திற்குச் சென்று முயற்சி செய்து பார்ப்போம் என்று சொல்லி என்னையும் அழைத்துக் கொண்டு சென்றான். டிக்கெட் கவுண்டர் அருகில் நாங்கள் சென்றபோது ஒரு அமெரிக்கர் மூன்று டிக்கெட்டுக்களை கவுண்டரில் கொடுத்து "பணம் வேண்டாம், யாராவது வந்தால் கொடுத்து விடுங்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது நாங்கள் பணத்தைக் கொடுத்து இரண்டு டிக்கெட்டுக்களைப் பெற்றுக் கொண்டோம். "பணம் வேண்டாம் என்று சொல்லி டிக்கெட்டுக்களைத் திருப்பிக் கொடுக்க இவ்வளவு தூரம் ஏன் வரவேண்டும்" என்று நாங்கள் அந்த அமெரிக்கரைக் கேட்டோம். அதற்கு அவரும் "விளையாட்டைப் பார்க்க வேண்டுமென்று இரண்டு மாதத்திற்கு முன்பு டிக்கெட்டுக்களை வாங்கினேன். இன்று எனக்கு முக்கியமான வேலை வந்து விட்டது. வீட்டிலேயே இருந்து விட்டால், இரண்டு ரசிகர்கள் விளையாட்டைப் பார்க்கும் வாய்ப்பை இழந்து விடுவார்களே என்று இங்கு வந்தேன்." என்றார். அந்த அமெரிக்கரின் பண்பைப் பாராட்டி விட்டு விளையாட்டைப் பார்க்க ஓடினோம். உள்ளே பத்து கோர்ட்டுக்களில் சேர்ந்தாற்போல் விளையாட்டு நடந்தது. அமெரிக்க டென்னிஸ் வீரர் ஜான் மெக்கன்ட்ரோ விளையாடிக் கொண்டிருந்தார். அதே நேரத்தில் இந்திய வீரர்களான ரமேஷ் கிருஷ்ணன், விஜய், அமிர்தராஜ், இரண்டு பேர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். இந்திய வீரர்களின் விளையாட்டை ரசித்து அமெரிக்கர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தபோது என் உள்ளம் பூரித்தது. (வளரும்)

திருமணம்

நாட்டரசன்கோட்டை கண. க. சொ. கோ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் கண்ணப்பன் என்ற சிவசுப்பிரமணியன் DECEக்கும் கானாடுகாத்தான் கானையார்மங்கலம் குப. சித. கண்ணப்செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி தெய்வநாயகி B Com.,க்கும் கானையார்மங்கலத்தில் 27-1-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருத்தம்

"நகரத்தார் குரல்" ஜனவரி '89 இதழில் 14ஆம் பக்கம் வெளியாகி உள்ள படங்களின் கீழே உள்ள குறிப்பில் 'கவிஞர் சே. கனகசபை அவர்கள் பாராட்டு இதழ் படித்துக் கொடுக்கும் காட்சி' என்று இருக்கிறது. அதை 'கவிஞர் சே. கனகசபை அவர்கள் எழுதிய பாராட்டுக் கவிதையை ஏ. அருணாசலம் அவர்கள் படித்துக் கொடுக்கும் காட்சி' என்று திருத்தி வாசிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

செய்தித் துளிகள்

ஃ 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களுக்கு நான்கு மாப்பிள்ளைகள். அந்த நால்வரும் வங்கிகளில் பணியாற்றி வருகிறார்கள். 'குழந்தைக் கவிஞர்' இந்தியன் வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்பது அனைவரும் அறிந்ததே.

ஃ தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாப் பட்டிமண்டப நிகழ்ச்சி வரும் 3-2-89 வெள்ளிக்கிழமை இரவு 9-16க்கு மதுரை வானொலியில் ஒலிபரப்பப்பட உள்ளது.

ஃ தமிழ்த் திரைப்பட இயக்குநரும் காரைக்குடியைச் சேர்ந்தவருமான திரு. இராம. நாராயணன் அண்மையில் நடைபெற்ற தமிழகச் சட்ட மன்றத் தேர்தலில் காரைக்குடித் தொகுதியில் தி. மு. கழகம் சார்பில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றுள்ளார்.

செட்டிநாட்டு ஊர்களும் அதன் பின்கோடு எண்களும்

பதினூறூர் வட்டகை

1	காரைக்குடி	623 001
2	பள்ளத்தூர்	623 107
3	கண்டனூர்	623 104
4	புதுவயல்	623 108
5	கோட்டையூர்	623 106
6	கோ. அழகாபுரி	623 106
7	உ. சிறுவயல்	623 208
8	கானாடுகாத்தான்	623 103
9	கொத்தமங்கலம்	623 105
10	கொ. லெட்சுமிபுரம்	623 105
11	நேமத்தான்பட்டி	623 103
12	பலவான்குடி	623 208
13	அரியக்குடி	623 202
14	சொக்கலிங்கம்புதூர்	613 101
15	அமராவதிபுதூர்	623 301
16	கல்லல்	623 305
17	மானகிரி	623 307
18	கல்லுப்பட்டி	623 306
19	நாச்சியாபுரம்	623 207
20	சிருவயல்	623 214

மேலப்பத்தூர் வட்டகை

21	வலையபட்டி	622 411
22	உலகம்பட்டி	622 410
23	குளிபிறை	622 402
24	பொன். புதுப்பட்டி	622 408
25	நற்சாந்துபட்டி	622 404
26	வேந்தன்பட்டி	622 419
27	மேலைச்சிவபுரி	622 403
28	வேகுப்பட்டி	622 408
29	கொப்பனாபட்டி	622 401
30	விரையாச்சிலை	622 412
31	இராங்கியம்	622 409
32	பனையப்பட்டி	622 406
33	குருவிக்கொண்டான்பட்டி	622 415
34	மிதிலைப்பட்டி	622 409
35	வி. லெட்சுமிபுரம்	622 412

மேல வட்டகை

36	கீழச்சிவல்பட்டி	623 205
37	விராமதி	623 212
38	பி. அழகாபுரி	623 205
39	நெற்குப்பை	622 405

40	கண்டவராயன்பட்டி	623 203
41	சிறுகூடல்பட்டி	623 215
42	பூலாங்குறிச்சி	622 413
43	ஆ. தெக்கூர்	623 201
44	ஆவினிப்பட்டி	623 205
45	செவ்வூர்	622 417
46	மகிபாலன்பட்டி	623 217

கீழ வட்டகை

47	தேவகோட்டை	623 302
48	ஆராவயல் சண்முகநாதபுரம்	623 314
49	தாணிச்சாவூரணி	623 302

தெற்கு வட்டகை

50	நாட்டரசன்கோட்டை	623 556
51	கொ. அழகாபுரி	623 560
52	பாகனேரி	623 553
53	சொக்கநாதபுரம்	623 318
54	மதகுபட்டி	623 553
55	அலவாக்கோட்டை	623 553
56	ஒக்கூர்	623 557
57	கீழப்பூங்குடி	623 507
58	சோழபுரம்	612 503
59	சக்கந்தி	623 560
60	காளையார்மங்கலம்	623 557
61	கருங்குளம்	623 615
62	கண்டரமாணிக்கம்	623 204
63	அரண்மனை சிறுவயல்	623 305
64	வெற்றியூர்	623 305
65	பனங்குடி	623 555
66	நடராஜபுரம்	623 555
67	செம்பனூர்	623 313
68	பட்டமங்கலம்	623 310

கீழப்பத்தூர் வட்டகை

69	அரிமழம்	622 201
70	கடியாபட்டி	622 505
71	இராயவரம்	622 506
72	தேனிப்பட்டி	622 202

நீண்டகரைப் பிரிவு

73	கோனாபட்டு	622 503
74	ஆத்தங்குடி	623 101
75	ஆ. முத்துப்பட்டணம்	623 101

பிள்ளை வரம் வேண்டுவோர் கவனத்திற்கு...

(பிள்ளை வரம் வேண்டுவோர் தெய்வங்களைத் துதித்து தினந் தோறும் பாராயணம் செய்ய எழுதப் பெற்ற பாடல்கள் சில சென்ற இதழில் வெளியிடப் பெற்றன. பொதுவான ஒரு பாடல் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.)

பொது

மாடுமனை உண்டு! ஒரு கோடிசுகம் உண்டு! வான்
வழங்கிடும் மழையும் உண்டு!
மடையுண்டு ஓங்கிவளர், வயலுண்டு! பயிருண்டு!
வற்றாத வளமை யுண்டு!
தேடிவரு, சுற்றமொரு கோடியென வந்தாலும்
சேர்க்கின்ற வலிமை யுண்டு!
திருவுண்டு! கொடையுண்டு! செறிவுண்டு! நெறியுண்டு
தீதிலாச் செய்கை உண்டு!
பாடுபட நல்லபணி யாளர்பல! உண்டெவரும்
பழியாத நெஞ்சம் உண்டு!
பரிவுண்டு! அறிவுண்டு! திறமுண்டு! அறமுண்டு!
பாவியேன் வாழும் மனையில்
ஓடிவிளை யாடவொரு சந்தான மில்லையேல்
உறுபயன் நிறைவா குமோ?
உற்றதுயர் நீக்கிடக் கற்றதெய் வங்களே!
ஒருசேய்தந் தருளுங் களே!
மெல்லடி நடந்துயென் இல்லமதில் என்பிள்ளை
விளையாடி நிற்க வேண்டும்!
வியர்வையொடு வீதிதரு புழுதியொடு வருபிள்ளை
மேனிநீ ராட்ட வேண்டும்!
கன்னலிழும் இதழோரம் வடிகின்ற பாலமுதைக்
கையால் துடைக்க வேண்டும்!
கண்கட்டி ஆடியே அம்புலியைக் காட்டியே
கைச்சோறு ஊட்ட வேண்டும்!
பிள்ளையுடல் சிறுநோய்க்கென் உள்ளம் கலங்கியே
பெருமருந் துண்ண வேண்டும்!
பிரியமுடன் உண்ணும்நல் லரியஊண் வகைதள்ளிப்
பேணுபத் தியமும் வேண்டும்!
கொள்ளைமகிழ் வெய்தியே பிள்ளையென் மீதேறிக்
குதித்தாட வேண்டும்! என்றும்
கும்பிட்ட கையொடுமை நம்புமிவ் வேழைக்குச்
குழந்தைதந் தருளுங் களே!

- மு. நா. நாராயணன்
காரைக்குடி

குழந்தைக் கவிஞருக்குத் தமிழன்னை பரிசு!



குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குக் கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து தொண்டாற்றி வரும் 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களைத் தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் கௌரவித்துள்ளது. 3-1-89 அன்று நடைபெற்ற அதன் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவில் வள்ளியப்பா அவர்களுக்குத் தமிழக ஆளுநர் டாக்டர் பி. ஸி. அலெக்ஸாண்டர் அவர்கள் 'தமிழன்னை பரிசு' எனும் பெயரில் ரூ. 5000/- ரொக்கமும் பட்டயமும், சான்றிதழும் அளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளார்.

ஏற்கனவே 9-1-1982ல் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் குழந்தைக் கவிஞரின் குழந்தை இலக்கியச் சேவையைப் பாராட்டி ரூ. 5000/- மதிப்புள்ள பொற்பதக்கம் வழங்கியிருப்பதோடு 'தமிழ்ச் செம்மல்' என்ற சிறப்புப் பட்டமும் அளித்துப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தது நினைவிருக்கலாம்.

''தனிப்பட்ட ஒருவனுக்கு வழங்கப் பெற்ற கௌரவமாக இதை நான் கருதவில்லை. தமிழ்க் குழந்தை இலக்கியத்தைப் பல்கலைக் கழகங்களும் அங்கீகரித்து ஆதரிக்க முன் வந்தது குறித்துப் பெரு மகிழ்ச்சியடைகிறேன்'' என்று அடக்கமாகக் கூறுகிறார், குழந்தைக் கவிஞர்.

அவ்விழாவில் குழந்னதக் கவிஞரோடு படைப்பிலக்கியம் இயற்றிய பதினுன்கு எழுத்தாளர்களும் கௌரவிக்கப் பெற்றனர்.

மேலைச்சிவபுரியில் திருக்குட நீராட்டு

மேலைச்சிவபுரியில் அமைந்திருக்கும் நெல்லி மரத்து வினைதீர்த்த விநாயகர் கோயிலின் திருக்குட நன்னீராட்டு 10-2-89 வெள்ளியன்று காலை 8-45லிருந்து 10 மணிக்குள் நிகழ இருக்கிறது.

அதனையொட்டி 9-2-89 இரவு 7 மணிக்கு திரு. பா. நமச்சிவாயம் தலைமையில் பட்டிமன்றமும் 10-2-89 மாலை 6 மணிக்கு கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிசுவநாத ஞானதேசிகர் அவர்கள் தலைமையில் கருத்தரங்கமும் நிகழவிருக்கிறது.

சிவானந்தரின் பொன் மொழிகள்

O 'எது நடந்தாலும் அது நமது நன்மைக்கே. இறைவா! உன் விருப்பப்படியே எல்லாம் நிகழும்' என்ற நம்பிக்கையுடன் செயலாற்றுங்கள்.

O ஒழுங்காக நீங்கள் தியானம் செய்தால், அமைதியான உறக்கத்தைப் பெறலாம்.

O வாழ்வில் எதிர்ப்படும் அனுபவங்கள் உங்களுக்கு அரிய பாடங்களைப் புகட்டி உங்கள் கண்களைத் திறக்கும்.

O தடங்கல்கள் அதிகமாகும் அளவு, அவற்றைச் சமாளிக்கும் பெருமையும் அதிகரிக்கிறது.

O ஒருவரிடம் மூன்று நல்ல அம்சங்களும் ஆறு தீய அம்சங்களும் இருக்குமானால் அந்த மூன்று நல்ல அம்சங்களையே காணுங்கள்.

O நீங்கள் கடவுளை நேசிக்கிறீர்களா? அப்படியானால் அவனது படைப்புகளுக்குத் தொண்டு செய்யுங்கள்.

O ஆணவம் அகன்றாலன்றி அமைதி ஏற்படாது.

O பிறரைப் பழிக்காது உங்களையே பழித்துக் கொண்டால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

O ஒருவரது நோக்கத்திற்கேற்பவே கடவுள் செயல்களைத் தீர்மானிக்கிறார்.

O வாழ்க்கையில் எதிர்ப்படும் எந்தப் பிரச்சனையையும் சமாளிக்க வல்ல தெய்வீக ஆற்றல் உங்களுக்குள்ளே மறைந்து கிடக்கிறது.

O உங்களிடம் உள்ளதைப் பயன்படுத்தினால், உங்களிடம் இருப்பது பெருகும்.

O திறமை என்பது காலந்தவறாமை, ஒழுங்கு, சுத்தம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

O ஆணவம், அகங்காரம் மற்றும் பேராசையை அகற்றிவிட்டு, தூய மனத்துடன் இறைவனைச் சந்தியுங்கள்.

O தூய இதயமே இறைவன் உறையும் ஆலயம்: அங்கே ஆண்டவனை வணங்குங்கள்.

O கோபத்தில் உங்கள் ஆற்றலை வீணாக்காதீர்கள்.

O நல்லது செய்யுங்கள்; இறைவனை நம்புங்கள்.

O கொடுங்கள். கொடுங்கள் கொடுங்கள். இதுவே அதிகமாகப் பெறுவதின் இரகசியம்.

O தியானம் உங்களுக்குத் தரமான செயலாற்றலை அளிக்கிறது.

O இயற்கையுடன் ஒன்றி வாழுங்கள். நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கலாம்.

O ஆசைகள் மற்றும் ஆணவத்தை உங்கள் இதயத்திலிருந்து அகற்றுங்கள். இறைவன் அங்கே குடி கொள்வார்.

O கடவுள் உங்களுக்கு இரு காதுகளையும், இரு கண்களையும், ஒரு நாக்கையும் அளித்திருப்பது எதற்காகத் தெரியுமா? நீங்கள் அதிகம் கேட்கவேண்டும்; அதிகம் காண வேண்டும். ஆனால் குறைவாகப் பேசவேண்டும் என்பதற்காகத்தான்.

தொகுப்பு : கல்யாணி சோலையப்பன்.
வேலூர்.

'நாநயா' வின் பொதுக் குழு

'நாநயா' வின் இரண்டாம் ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டம் 18-12-88 அன்று சிவகங்கையில் நடைபெற்றது 'நாநயா' வின் 1989 ஆம் ஆண்டுத் தலைவராக தேவகோட்டை உ. மு. சுப. லெ. அழ. அழகப்ப செட்டியார் அவர்கள் தேர்வு செய்யப் பெற்றார்கள். 1989 ஆம் ஆண்டில் ஆயிரம் நகரத்தார் மாணவர்களுக்குக் கல்விக்கு உதவி செய்வது 300 பேருக்கு வேலை வாய்ப்பில் உதவி செய்வது போன்ற பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்த முடிவு செய்யப் பெற்றது.

புலவர் போற்றும் புகழ்க் குலம்

முனைவர் லெட்சுமி மீனுட்சிசுந்தரம்
இந்தியவியல் துறை, மலாயாப் பல்கலைக் கழகம்

''ஒன்ரு உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பதொன் றில்''

என்பது வள்ளுவம். நெருநல் உளனெருவன் இன்றில்லை எனும் பெருமை படைத்த உலகில் இசையோடு வாழ்பவரே வாழ்பவர். நம் நகரத்தார் குலம் இசையோடு வாழ்ந்த, வாழ்கின்ற குலமேயாம். புலவர் செந்நாவிற் பொருந்திய குலம்! 'பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த' ஒரு தனிக்குலம்! ஐம்பெருங் காப்பியங்களுள் மூன்று காப்பியங்களுக்கு வித்தாய் விளங்குவது நம் செட்டி குலமே! பழம்பெருமை நமக்குண்டு; எனினும் இருபதாம் நூற்றுண்டுப் புலவர்களின் புகழ் மொழிக்கும் இலக்காக அமைவது நம் குலம்!

இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற மாகவிஞன் பாரதி. பைந்தமிழ் பொழியும் அவன் நா, நம் குலப் பெருமை பேசுகிறது. காரைக்குடி இந்துமதாபிமான சங்கத்திற்கு வருகைதந்த பாரதி அச்சங்கத்தைத் தோற்றுவித்த நகரத்தார் இளைஞர்களைப் பாராட்டுகிருர். நம் குலப் பெருமை விரிவாகக் கூறப்படும் பகுதி கீழே இடம் பெறுகிறது:-

''உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர்பலர் ஊக்கம் மிக்கார்
உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்
அன்பொன்றே உறுதி யென்பார்
வண்மையே குலதர்மமெனக் கொண்டார்
தொண்டொன்றே வழியாக் கண்டார்
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்''

இப்பாடலில் தனவணிகரின் ஊக்கம், வாய்மை, அன்பு, வள்ளன்மை, பொதுத் தொண்டு, இறைவழிபாடு போன்ற உயர் குணங்கள் போற்றப்படுகின்றன. நம் குலப் பெருமைக்குத் தூண்டுகோலாய்த் திகழ்ந்த தனி மனிதர்களையும் பாரதி பாராட்டுகிருர். தமிழ் மணம் உணர்ந்த தக்காராம் வை. சு. சண்முகஞ் செட்டியாருக்குச் 'செட்டி மக்கள் குல விளக்கு', 'தமிழ் காக்குந் துரை' என்ற புகழாரங்கள் பாரதியால் சூட்டப்படுகின்றன. சங்க காலத் தமிழ்ப் புரவலர்போல வை சு. வும் தன் காலத்துப் புலவர்களை ஆதரித்து மொழி வளர்த்தார்.

சுப்பிரமணிய பாரதியாரைப் போலவே ஆவேசமான பாடல்களைப் பாடித் 'தமிழ்க் கன'லாகத் திகழ்ந்தவர் யோகி சுத்தானந்த பாரதியார். இவர் 'தனவணிகர் கும்மி' பாடிச் செட்டி குலத்தைச் சிறப்பித்தவர். செட்டியார் என்ற பெயரின் காரணத்தைக் காட்டத் தவறவில்லை.

''வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடுவார்-ஏதும்
வீணின்றி மிகக் கணக்கிடுவார்''

செட்டாக வாழ்வதனுல்தான் செட்டியார் என்ற பெயர் வந்தது. வீட்டில் செட்டாக வாழ்ந்தாலும் பொதுப் பணிகளுக்கு கணக்கின்றிக் கொடுப்பது நம் மரபினர்

வழக்கம். ஆகவே நம் குலத்த வரை 'நல்ல பொதுநல ஊழியர்' என்றே அழைக்கிறார் யோகி. மொழித் தொண்டிற்காகவும் நம் மவரைப் போற்றி வாழ்த்துகி றார் யோகி.

''தென்மொழிக் கற்பகஞ்
செழிக்கச் செய்திடுஞ்
செட்டிநன் னாட்டினர்
வாழியவே''

நம் குலத்தினரின் குருதியுடன் கலந்தது தானமும் தருமமும். அறச்சிந்தையும், இச் சிந்தனைக்கு உறுதுணையான செல்வமும் நம் குலத்தினர்க்கு எவ்வெப் பிறவியி லும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறார்.

''ஏழ்பிறப்பிலும் ஈகையுஞ்
செல்வமும்
இலகி வைசியர் வாழியவே''

செட்டிகுலக் கவிஞர் கண்ண தாசன் உலகத்தில் வாழும் அனைத்துத் தமிழ் இதயங்களிலும் தனியரசாட்சி புரிந்தவர். ''வாழ் வாங்கு வாழ்ந்த குலமே'' என்ற வாழ்த்துப் பாடலில் நம் குலத் தொன்மையையும், ஏற்றமிகு பண்புகளையும் போற்றிப் புகழ் கிறார். வந்தவழி மறவாது. வாய்மை நெறி தவறாது வாழ்ந்த நம் குலத்தவரின் தொழிலும் மத நெறியும் அவரைக் கவர்கின்றன. சென்றவிடமெல்லாம் தெய்வத் திருப்பணி செய்வது நம்மவர் பண்பு. இதனை,

''செட்டிமக்கள் இந்தபூமியிலே
பல
தெய்வத்துக் களித்தது
கோடியம்மா
கட்டிய கோவில்கள் ஆயிரமே—
அதில்
கந்தனின் கோவில்கள்
யாவையுமே''

என்று பாடுகிறார். இப்பாடல் கொடாவில் உள்ள அலோர்ஸ்டார் தண்டாயுதபாணி கோவிலைச் சிறப்பிப்பதுமாம்.

கல்விப்பயிர் வளரக் கார்மேக மாகச் செல்வத்தைப் பொழிந்த வர்கள் செட்டியார்களே! எத்த னையோ பள்ளிகளும் கல்லூரி களும் செட்டியார்களின் செல்வத் தால் இயங்கின. செட்டிநாட் டரசர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிக் கல்விக்கும் தமிழிசைக்கும் உயர்பணி ஆற்றி னார். வள்ளல் அழகப்பர் கோடி கொடுத்த கொடைஞர்! குடியி ருந்த வீடும் கொடுத்த விழுத் தெய்வம்! அழகப்பர் பற்றி,

''கொண்டதெல்லாம் கல்விக்கே
கொடுத்து வந்த
அழகப்பன் தவிர யாரே''

எனவும்

''முதலாளி மார்களிலே
முழுமுதலைக்
கல்விக்கே முடித்து வைத்த
முதலாளி நீ கொன்றாய்''

எனவும் போற்றுகிறார். அழகப்பர் பல்கலைக் கழகம் காணவேண்டும் என்ற விழைவு நிறைவேறும லேயே தன் புகழுடம்பை நீத்தார். இதனைத் தன் கற்பனை வண்ணத் தால் கவியரசு போற்றுவதைப் பாருங்கள்!

''சதிகாரச் சாவே
நின்வயிற்றிலே
சர்வ கலாசாலை காண
இதமான ஆள்வேண்டு
மென்றோஎம்
பெருமானை எடுத்துச் சென்றாய்''

நம் குலம் தொல்புகழ் கொண்டது என்பது மறுக்க இயலா உண்மை. இருப்பினும் மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலே மகிமை இல்லை' என்ற பாரதியின் வாக் குப்படி நம் பழம்பெருமையைப் பேசிக் கொண்டிருப்பதால் மட்டும் பயனில்லை. இப்பழம் புகழைத் தக்க வைத்துக் கொண்டு பல துறைகளிலும் முன்னேறி வாழ வேண்டும் என்பதை நம் குலத் தில் பிறந்த ஒவ்வொருவரின் குறிக்கோளாதல் வேண்டும். குலப்பெருமை காத்துக் குலத்தின் உயர்வுக்குப் பாடுபடுவோம்!

மனம் மாறிய பாம்பு !

புல்வெளிப் பகுதியில் பாம்பு ஒன்று வசித்து வந்தது. அந்த வழியாக யார் போனாலும் அது அவர்களைக் கடித்து வந்தது. ஒரு நாள் யோகி ஒருவர் அந்த வழியே போய்க் கொண்டிருந்தார் அவரைப் பார்த்த பையன்கள் சிலர் அவரிடம் சென்று "சுவாமி, அந்தப் பக்கம் போக வேண்டாம். கொடிய பாம்பு ஒன்று இருக்கிறது" என்று கூறினார்கள். அதற்கு அவர் "குழந்தைகளே! பாம்பு என்னை ஒன்றும் செய்யாது" என்று கூறிவிட்டு பாம்பு இருந்த வழியாகவே நடந்து சென்றார். பாம்பு அவரைப் பார்த்ததும் சீறிக் கொண்டு வந்தது. பாம்பைப் பார்த்து அவர் ஒரு மந்திரத்தைச் சொன்னார். பாம்பு ஒரு மண்புழு போல அவரது காலடியில் படுத்துக் கொண்டது. யோகியும் கருணையுடன் பாம்புக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்தார். தீயகுணங்களை விட்டு விடும்படி கூறிச் சென்றார். அதன் பின்பு பாம்புக்கு தீயகுணங்கள் போய் விட்டன. பாம்பும் மந்திரத்தை ஜெபித்து இறைவனை வணங்கி வந்தது. பாம்பு யாரையும் கடிப்பதில்லை என்பதைத் தெரிந்து கொண்ட அந்த ஊர்ச் சிறுவர்கள் பாம்பைத் துன்புறுத்தினார்கள். அதன் வாலைப் பிடித்து இழுத்து தரையில் அடித்துத் தூக்கி எறிந்தார்கள். இதனால் பாம்புக்கு உடலெங்கும் ரத்தக் காயங்கள் ஏற்பட்டன. பாம்பு பொறுமையாக எல்லாத் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டது.

சில மாதங்கள் கழித்து யோகி பாம்பைப் பார்ப்பதற்காக வந்தார். பாம்பு மிகவும் மெலிந்திருப்பதைப் பார்த்து காரணம் என்ன என்று விசாரித்தார்: பாம்பு நடந்தவற்றை விளக்கியது. எல்லாவற்றையும் கேட்ட யோகி பாம்பிடம் "நீ சுத்த முட்டாளாக இருக்கிறாயே! உன்னைக் காப்பாற்றிக் கொள்ள உனக்குத் தெரியவில்லையே! உன் தீய குணங்களைத்தானே விட்டுவிடச் சொன்னேன். உன்னைத் துன்புறுத்தியபோது ஏன் சீறுமல் இருந்தாய். யாரையும் கடிக்க வேண்டாம் என்று தான் சொன்னேனே தவிர யாரையும் சீறிப் பயமுறுத்தக் கூடாது என்று சொல்லவில்லையே" என்று கூறினார். கெட்டவர்கள் மீது சீறத்தான் வேண்டும்; அவர்கள் தீமை செய்யாமல் இருக்கும் பொருட்டு அவர்களைப் பயமுறுத்தத்தான் வேண்டும் என்பதை உணர்த்துகிறது இந்தக் கதை.

("பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய கதைகள்" என்ற நூலிலிருந்து)

— அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்.
காரைக்குடி

உங்கள் குரல்

மேலைச்சிவபுரி வள்ளுவர் மன்றம் பற்றிய கட்டுரையைச் சரியான நேரத்தில் விரிவாக வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

வெ. கண்ணன்

காரைக்குடி

திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் முப்பெரும் விழா பற்றிய செய்திகள் அருமையாகத் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளன. 'நகரத்தாரும் தமிழகமும்' என்ற தலைப்பில் வெளியான செய்தி நகரத்தாருக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

கே. மீனாட்சி சுந்தரம்

திருநெல்வேலி

பிள்ளைவரம் வேண்டுவோருக்கான பாடல்களை திரு. மு. நா. நாராயணன் அருமையாக எழுதியிருக்கிறார். அதை வெளியிட்டதில் ''நகரத்தார் குர'' லுக்கும் பெருமைதான்.

இராம. சிங்காரம்

நாட்டரசன்கோட்டை

மீண்டும் தாலாட்டுப் பாடல்களை வெளியிடுவது நன்று. ஜனவரி'89 இதழில் வெளியிடப் பெற்றுள்ள 'கண்ணே கண்ணுறங்கு' தாலாட்டை எழுதிய பேராசிரியை கேபி. அழகம்மை அவர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

எஸ். பிரேமா

சென்னை

ஜனவரி இதழில் வெளியாகியுள்ள செல்விகளின் சேர்ந்திசை, தாலாட்டு, பிள்ளைவரம் வேண்டுவோருக்கான பாடல்கள் எல்லாம் அருமை. குரல் வரவர மெருகுடன் திகழ்கிறது.

ஆர். சம்பத்

மணப்பாறை

பேராசிரியர் திரு. சுப. கதிரேசன் உதிர்த்த முத்துக்கள் நல்ல சிரிப்பு விருந்து. தொடர்ந்து இது போன்ற சிரிப்பு முத்துக்களை வெளியிடுங்கள்.

ஆர். நாராயணன்

திருச்சி.

விளுக்கள் இங்கே..

1. திருக்குறளில் இடம் பெறுவது எது?
2. நூலகத்தில் இருப்பது எது?
3. நெடுஞ்சாலைத் துறையோடு தொடர்புடையது எது?
4. எண்ணோடு தொடர்புடையது எது?
5. ஆதரவாய் அமைவது எது?
6. முத்தம் இழந்தது எது?
7. எதிர் மறைவில் அமைவது எது?
8. மங்கலத்தன்மை கொண்டது எது?

தஞ்சாவூரில் பிள்ளையார் நோன்பு

தஞ்சாவூர் நகரத்தார் சங்கம் சார்பாக 14-12-88 அன்று பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. 140 பேர் இழை எடுத்துக் கொண்டனர். உப்பு, மஞ்சள், கல்கண்டு பட்டு போன்ற பொருட்கள் ஏலம் விடப்பெற்றன. பிள்ளையார் நோன்பு ஏற்பாடுகளைச் சங்கச் செயலாளர் திரு. ஆர்எம். ஜோதிலிங்கம் சிறப்பாகச் செய்திருந்தார்.

பிள்ளையார் நோன்பு

சென்னை வளசரவாக்கம் நகரத்தார் சங்கத்தில் 14-12-88 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

சிவாலய வழிபாட்டு முறை

ஃ மலர்கள், தேங்காய், பழம், சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, தீபம் இட எண்ணெய், நெய் இவைகளில் எவையேனும் கொண்டு செல்ல வேண்டும்.

ஃ வணங்கும்போது 'ஓம் நமச்சிவாய' எனும் திருமந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

ஃ தலைவினாயகரைத் தரிசிக்க வேண்டும் தலையில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும்.

ஃ கொடிமரம், பலி பீடம், நந்தி இவைகளை வணங்கியபின துவாரபாலகரின் உத்திரவு பெற்று இறைவன் சந்நிதி அடைய வேண்டும்.

ஃ மூல மூர்த்தியை வணங்கிய பின் சந்திரசேகர், நடராசர், சிவகாமி அம்மை, சோமாஸ்கந்தர் (பிரதோஷ சுவாமி, அம்மன) முதலிய உற்சவ மூர்த்திகளை வணங்க வேண்டும்.

ஃ அம்பிகை சன்னதியடைந்து தேவியை வழிபட வேண்டும்.

ஃ பின்னர் பிரகாரத்தில் உள்ள நாயன்மார், தெட்சிணாமூர்த்தி, மகாலெட்சுமி, முருகன், துர்க்கை, நவக்கிரகம் முதலிய தெய்வங்களை வழிபட வேண்டும்.

ஃ இறைவன், தேவி இவர்களின் கோயில்களை குறைந்தது மும்முறையாவது வலம் வர வேண்டும்.

ஃ கடைசியாக கொடிமரத்துக்கு அருகில் வந்து பூமியில் விழுந்து வணங்கியபின் சற்று தூரத்தில் அமர்ந்து ஐந்தெழுத்தை 108 முறைக்குக் குறையாமல் ஓதிய பின் இறைவனிடம் விடைபெற்று, கோயிலை விட்டு வர வேண்டும்.

தொகுப்பு. தஞ்சை
பழ. வள்ளியப்பன்.



படிப்பதும் தமிழ்.,,

திருமதி ராஜகுமாரி நாகப்பன் B SC. நாட்டரசன்கோட்டை

பத்துப்பொன் மெத்தை, பசும்பொன் தலகாணி
ஐந்துபவுன் தட்டு, அதுநிறைய வெற்றிலை
சாதிக்களிப்பாக்கு, சங்கு வெள்ளை சுண்ணாம்பு,
ஏலங்களிப்பாக்கு, இளங் கொடிக்கால் வெற்றிலை
செதுக்காமல் தின்றிருக்கும் செனகனார் பேரனே!
இன்னார் மகனே, இந்திரனார் பேரனே?
மன்னர் மகனே, மகராசர் பேரனே?
சீதை மகனே, திருச்சடையாள் பேரனே?
பெருமாள் மகனே, புண்ணியவார் பேரனே?
மாமரத்தை வெட்டி மரக்கால் திருக்கடைத்து
மாமரக்கா போட்டிருக்கும் மகராசா பேரனே?
பூமரக்கா போட்டிருக்கும் புண்ணியவார் பேரனே!
ஆருருந்தில்லை அறியவந்த பார்ப் பார்க்குக்
காரியமும் சொல்லி கணக்குரைப்பார் பேரனே?
மேங்கணக்குச் சொல்லும் விசயருடைய பேரனே?
வெள்ளி எழுத்தாணி, வெண்கலத்தால் மைக்கூடு
தொட்டுக் கணக்கெழுதும் துரைராஜா பேரனே?
ஏறுவதும் கப்பல் இறங்குவதும் துறைமுகம்
படிப்பதும் தமிழ் பார்ப்பதும் பணக்கணக்கு
வடக்கே இடம்வாங்கி வாழைவைத்துத் தோப்பாக்கி
வாழை இலைநறுக்கி வந்தாரைக் கையமர்த்தி
வருந்தி விருந்துவைக்கும் — தம்பி நீ
வரிசையுள்ளார் பேரனே!
தெற்கே இடம்வாங்கி தென்னைவைத்துத் தோப்பாக்கி
தென்னை குலைநறுக்கி சேர்ந்தாரைக் கைஅமர்த்தி
சேர்த்து விருந்துவைக்கும் — தம்பி நீ
திசையுள்ளார் பேரனே?
வேதாந்தம் கேட்டுவரும் வீமருட பேரனே?
தமிழோசை கேட்டுவரும் தருமருட பேரனே?
கண்ணே! கண்மணியே! நீகண் உறங்கு
ஆராரோ ஆரிராரோ கண்ணே கண்ணுறங்கு!

விடைகள் இங்கே..

1. கல்லாமை
2. நாவல்
3. ரஸ்தாளி
4. முந்திரி
5. சப்போட்டா
6. கிஸ்மிஸ்
7. கொய்யா
8. எலுமிச்சை.

ஆக்கம்: 'புலவர் நகைமாமணி'
கண. கணேசன் (திருச்சுழி)

திருமணம்

மதுரை சான்டர்சன் பார்ம சூட்டிக்கல்ஸ், பாப்பி ஆர்கானிக்ஸ் பி. லிட். ஆகிய நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர் நெற்குப்பை கேஆர். சுந்தரம் அவர்களின் புதல்வன் திருவளர் செல்வன் செந்தில் குமார் B Sc., D.B.M. க்கும் ஆ. தெக்கூர் ஏ என். எம். சிங்காரம் செட்டியார் அவர்களின் புதல்வி திருவளர் செல்வி அன்னம் B.Sc.,க்கும் ஆ. தெக்கூரில் 18-1-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ

"நகரத்தார் குரல்" ஆலோசனைக் குழு உறுப்பினர் அலவாக்கோட்டை அண. அரு. சித. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் வள்ளியப்பன் என்ற ராஜேந்திரன் B Com., P. G. D. I. M.க்கும் கண்டனூர் வயி. அ. வயி. அண்ணாமலை செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மெய்யம்மை என்ற வசந்தா B.Com.,க்கும் கண்டனூரில் 27-1-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.